NSW Health

NSW GOVERNMENT

# குழந்தைப் பல்-வைத்திய சலுகைத் திட்டம் (Child Dental Benefits Schedule)

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

### குழந்தைப் பல்-வைத்திய சலுகைத் திட்டம் (Child Dental Benefits Schedule) என்பது என்ன?

அடிப்படைப் பல் வைத்தியத்திற்காக இரண்டு நாள்காட்டி வருடங்களில் 'மெடிகெயர்' சலுகைகளாக $1,095 வரைக்குமான தொகையைத் தகுதி பெறும் குழந்தைகளுக்கும், பதின்ம வயதினருக்கும் 'குழந்தைப் பல்-வைத்திய சலுகைத் திட்டம்' (Child Dental Benefits Schedule (CDBS)) அளிக்கிறது.

### CDBS-இற்கு என் பிள்ளை தகுதி பெறுகிறாரா?

பின் வருவன பொருந்தும் குழந்தைகளும், பதின்ம வயதினரும் CDBS எனும் 'குழந்தைப் பல்-வைத்திய சலுகைகள் திட்ட'த்திற்குத் தகுதிபெறுவர்:

- 0 முதல் 17 வயது வரைக்கும் உள்ள பிள்ளைகள் நாள்காட்டி ஆண்டில் ஏதேனும் ஒரு நாளுக்கு
- 'மெடிகெயர்' வசதிக்குத் தகுதியுள்ளவர்கள்
- Family Tax Benefit Part A ('குடும்ப வரிச் சலுகை – பகுதி A) அல்லது Department of Human Services ('மானிட சேவைகள் திணைக்களம்')-இன் வலைத்தலத்தில் உள்ள பட்டியலில் இருந்து ஆஸ்திரேலிய அரசாங்கக் கொடுப்பனவு ஒன்றைப் பெற்றுவரும் பிள்ளை

### பொது பல் சிகிச்சை நிலையமொன்றில் CDBS -ஐப் பயன்படுத்துவதற்காக 'நிதி-விவகார சம்மதப் படிவம்' (financial consent form) ஒன்றில் கையொப்பம் இடுமாறு என்னிடம் ஏன் கேட்கப்படும்?

- CDBS -இற்குத் தகுதிபெறும் பிள்ளைகளுக்காக 'மெடிகெயர்'-இடமிருந்து சலுகைத் தொகைகளைக் கோருவதற்கு பொது பல் மருத்துவ சேவைகளுக்கு இந்தப் படிவம் ஏது செய்யும்
- சேவைகளை மேம்படுத்தவும், பல் மருத்துவம் தேவைப்படும் அதிகமான நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கவும் இந்த சலுகைத் தொகைகள் பயன்படுத்தப்படும்.

### பொது பல் மருத்துவ சிகிச்சையகம் ஒன்றில் என்னுடைய பிள்ளைக்கான சலுகையை நான் பயன்படுத்தினால் கட்டணங்கள் எதுவும் என்னிடமிருந்து வசூலிக்கப்படுமா?

இல்லை. உங்களுக்கு செலவுகள் எதுவுமில்லாத வகையில் உங்களுடைய பிள்ளைக்கான பராமரிப்பினை NSW மாநில பொது பல் மருத்துவ சிகிச்சையகங்கள் அளிக்கும். 'மெடிகெயர் CDBS' திட்டத்தின் உச்சவரம்பான $1,095 -ஐ நீங்கள் தொட்டாலும், அல்லது CDBS திட்டத்தின் கீழ் வராத சிகிச்சை உங்களுடைய பிள்ளைக்குத் தேவைப்பட்டாலும், இந்த சேவைகளுக்காக உங்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கப்படாது.

### CDBS-ஐப் பற்றிய மேலதிகத் தகவல்களை நான் எங்கிருந்து பெறலாம்?

NSW மாநில பொது பல் மருத்துவ சேவைகளில் கிடைக்கும் CDBS -ஐப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு health.nsw.gov.au/cdbs எனும் வலைத்தலத்திற்குச் செல்லுங்கள்.



**CDBS -ஐப் பற்றிய பொதுவான தகவல்களுக்கு Department of Human Services-இன் வலைத்தலத்திற்குச் செல்லுங்கள்.**

### இதைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ள வேண்டுமா?

எமது பணியாளர்களிடம் கேளுங்கள், அல்லது **health.nsw.gov.au/cdbs**-இற்குச் செல்லுங்கள்.

February 2024 © NSW Health. SHPN (COHS) 220255-17 Tamil